



பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 136வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (14.11.2024) சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகர ராஜா, ரூபி ஆர்.மனோகரன், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), ச.செல்வராஜ் (செய்தி) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (14.11.2024) காலை, மருத்துவர் பாலாஜியை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். இந்நிகழ்வில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி மற்றும் உயர் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

## ‘இந்தியாவை அறிந்து கொள்வீர்’ திட்டத்தின் கீழ்

# 40 புலம் பெயர்ந்த இளைஞர்கள் சென்னை வருகை!

### எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தை பார்வையிட்டனர்!

சென்னை, நவ.15-

தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தை பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40 புலம் பெயர்ந்த இளைஞர்கள் இந்தியாவை அறிந்து கொள்வீர் என்ற திட்டத்தின் கீழ் நேற்று (14.11.2024) பார்வையிட்டனர்.

“இந்தியாவை அறிந்து கொள்வீர்” என்ற திட்டத்தினை ஒன்றிய அரசு நடத்தி வருகிறது. இதன் 78வது நிகழ்ச்சி நவம்பர் 12 முதல் நவம்பர் 15 வரை நடைபெறு வதையொட்டி, இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நேற்று (14.11.2024) செய்தி மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு வருகை தந்து பார்வையிட்டனர்.

முதலில் வருகை புரிந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விருந்தினர்களை இந்நிறுவன தலைவர் டிராட்ஸ்கி மருது, இந்நிறுவன முதல்வர்(மு.கூ.பொ) ஜே.வே.மோகனகிருஷ்ணன், இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரான ரவி பிரகாஷ் தலைமையில் வரவேற்றனர்.

விருந்தினர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகளான ஒளிப்பதிவு, எண்மிய இடைநிலை, ஒலிப்பதிவு, இயக்குதல், படத்தொகுப்பு, உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப் பயன் பிரிவு மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு ஆகிய பாடப்பிரிவுகளைப் பற்றி விவரிக்கும் விளக்கப் படமும், இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட “ஜாகீர் ரெசிபி” என்ற திட்ட குறும்படம் ஒன்றும் திரையிட்டு காட்டப்பட்டது.

இந்நிறுவன வளாகத்திலுள்ள ஒலிப்பதிவு பிரிவில் எவ்வாறு ஒலிப்பதிவு பணிகள் நடைபெறுகிறது என்பதை பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல் பிரிவையும் பார்வையிட்டனர். பின்னர் எண்மிய இடைநிலை பிரிவிற்குச் சென்று, அப்பிரிவில் திரைப்படங்களில் வண்ணங்கள் எவ்வாறு மெருகேற்றி மாற்றியமைக்கப்படுகிறது பற்றியும், மாணவர்கள் தங்களது குறும்படங்களில் வண்ணங்களை எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பது எடுத்துரைக்கப்பட்டது. உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பிரிவிற்குச் சென்று, உருவகங்கள் எவ்வாறு உருவகப்படுத்தப்படும், உருவகங்கள் எவ்வாறு உயிரூட்டப்படுகிறது திரைப்பட மாக்க பட்டும் என்பது விவரிக்கப்பட்டது.

அடுத்ததாக, தொலைக்காட்சி தயாரிப்பு மற்றும் படத்தொகுப்பு பிரிவிற்குச் சென்று திரைப்படங்கள் எவ்வாறு கதை வடிவம் பெற்று உருவாகிறது என்பது பற்றியும் அதன் தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இறுதியாக, ஒளிப்பதிவு பிரிவிற்குச் சென்று, ஒளிப்பதிவு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பது பற்றியும், வெளிநாட்டு விருந்தினர்கள் தங்கள் ஆவலின் பேரில், அவர்கள் நடித்து காட்டப்பட்டதை ஒளிப்பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ஒளிப்பதிவு துறை பற்றியும், ஒளி விளக்குகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்ச்சியில் பங்குபெற்ற விருந்தினர்கள் 78வது இந்தியாவை அறிந்து கொள்வீர் என்ற திட்டத்தை பற்றியும் அதன் முக்கியத்துவத்தை பற்றியும் தெரிவித்தோடு, இந்நிறுவனம் திரைத்துறையை வளர்ப்பதற்கு சிறப்பாக இயங்கி வருகின்றது என அறிந்து கொண்டதாக அகமகிழ்ந்து தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், வெளியுறவுத் துறை அமைச்சக பிரிவு அலுவலர் ரவி பிரசோப், மாவட்ட சுற்றுலா அலுவலர் கமலக்கண்ணன் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஷாலினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!... முதல் பக்கத் தொடர்ச்சி

மாவட்டத்திலேயே நல்ல வேலையைப் பெறுகிற வகையில் தொழிற்பேட்டைகளை உருவாக்கி வருகிறோம். கோவை, விருதுநகர் மாவட்டங்களைத் தொடர்ந்து நவம்பர் 14, 15 தேதிகளில் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் கள ஆய்வுப் பணிகளை உங்களில் ஒருவனான நான் மேற்கொள்ள விருக்கிறேன்.

தைவான் நாட்டைச் சேர்ந்த டீன் ஷூஸ் நிறுவனம் தனது தொழிற்சாலையை அங்கே தொடங்க இருப்பதால் இரு மாவட்ட மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க விருக்கிறது.

திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வொரு நாளும் மக்களின் நலன் காக்கும் நாட்களேயாகும். அதனால்தான் ஒவ்வொரு மாவட்டச் சுற்றுப்பயணத்திலும் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். அதைப் பார்த்துச் சிலர் வயிறு எரிகிறார்கள். ஏதேதோ பேசுகிறார்கள். அவர்கள் பேசட்டும். நாம் சாதிப்போம். கழக ஆட்சியின் வெற்றிச் சரித்திரம் தொடரட்டும்.”

– என்று எழுச்சி மேலிடக் குறிப்பிட்டார்கள்.

**இன்று ‘சிப்காட்’ தொழிற்பேட்டைக்கு அடிக்கல்!**

இந்த அறிவிப்பிற்கொப்ப - பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று கள ஆய்வு மேற்கொள்கிறார்.

இன்று கள ஆய்வின் போது - அரியலூர் மாவட்டம் - ஜெயங்கொண்டம் அருகே உள்ள மகிமைபுரம் பகுதியில் ‘சிப்காட்’ தொழிற்பேட்டை அமைக்க அடிக்கல் நாட்டப்படுகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அடிக்கல் நாட்டுகிறார்.

தொடர்ந்து, அரியலூர் கொல்லாபுரம் பகுதியில் நடைபெறும் பிரம்மாண்ட அரசு நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான, பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கி, விழாப் பேருரையாற்றுகிறார்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.முரளி தலைமை!

# துறைமுகம் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் “என் உயிரினும் மேலான” கலைஞர் நூற்றாண்டு பேச்சரங்கம்!

### திருச்சி என்.சிவா எம்.பி. – இரா.தமிழ்வாணன் – மா.மதன்குமார் சொற்பொழிவு ஆற்றினர்!

சென்னை, நவ. 15-

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் "என் உயிரினும் மேலான" பேச்சுப் போட்டியில் பட்டை தீட்டப்பட்ட பேச்சாளர்களின் தொடர் கருத்தியல் நிகழ்ச்சி 13.11.2024 - புதன் கிழமை அன்று இராஜா அண்ணமலை மன்றம், பாரி முனையில் நடைபெற்றது.

துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில் நடைபெற்றது.

பேச்சரங்கில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.ராஜசேகர் எம்.விஜயகுமார், ப. ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கே.விநாயகம், வெ.பரிமளம், ராஜேஷ் ஜெயின் எம்.சி, எல்.நவீன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், மே. ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், எல். சத்யநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், த. கதிரவன் (எ) ராஜா, ஆ. நா.பார்த்தீபன், ஆர்.ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி. சிறப்புரையாற்றினார்.

பேச்சரங்கத்தில் "நல்லதை மட்டும் செய்வோம்" எனும் தலைப்பில் இரா. தமிழ்வாணனும், "முதல்வரால் இது முதன்மை பெறும், புதல்வரால் இது இன்னும் பேர் பெறும்" எனும் தலைப்பில் அருணை மா.மதன்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், துறைமுகம் தொகுதிப் பார்வையாளர் இரா.நரேந்திரன், தமிழன் பிரசன்னா, மருத்துவர் பி. எம்.யாழினி, சுதா தீனதயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், டி.எஸ்.சேகர், எல்.எழில்அரசு, லண்டன் கா.முருகன், ஜி.மாசிலா மணி, எம். வி.ஆர்.சரவணன், எம்.நாராயணன், வி.எம்.முருகவேல், வி.அசோக்குமார், வி.சங்கர், எஸ்.கதிர்வேலு, ஆர்.தங்கமணி, பி.ஜி.சுகுமார், டி.சுபாஷ் சந்திர போஸ், ஹாஜி முகமது அலி, பிரஸ் சேகர், வீடியோ கே.சம்பத், எம்.சுரேஷ், பி.சகாயராஜ், எல்.சாந்திலால், பி.கருணா, பி.மோகன்லால் ஜெயின், பாக்சர் ராம் பிரசாத், டி. ஜே.திலிப்ராஜ், பூங்கா நகர் கண்ணன், வடிவேலு, எஸ். ஜெகன்நாத், ஆர்.பி.ரமேஷ், தனசேகர், ஜி.வெங்கடேஸ்வரன், ஆர்.வேலாயுதம், டி.சேகர், எம்.துரை, பா.நடராஜன், எச்.சீமா பஷீர், ஏ.வி.சுரேஷ், தேவேந்திரன், பாரி, ஜே.மணிவண்ணன், எஸ்.புகாரி, டி.முல்லை செல்வன், செல்வன், இ.ஜெய்சங்கர், எஸ்.பாபு, டி.ரமேஷ், கே.ஸ்ரீதர், திராவிட சுதாகர், ரா.ரஞ்சித் குமார், சரவணன், ஜே.சிவகுமார், எம். துரை, அன்னக்கிளி, ஆர். அனிதா, எம்.எழிலரசி, ஆதாம், கிஷோர், தேன்மொழி, செல்வி, வளர்மதி, ஏ.சுசீலா, தனபாக்கியம், கே. தமிழ்ச்செல்வி, கே.கோவிந்தன், எம்.எஸ்.அசாருதீன், பி. எல்.யஷ்வந்த், நா.மோகன், ஏ.திருப்பதி, ஏ.ஆனந்த், எம். சண்முகசுந்தரம், கே.சூர்யா பிரகாஷ், பி.செந்தில்குமார், ஆர்.சுமன்ராஜ், கா.பாலாஜி, எஸ்.சிம்ரன்கான், டீ. பிலிப்ஸ், பி.விஷ்ணு சக்கரவர்த்தி, முகமது ரிபாய், ஜெ.லோகேஷ், பி. கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் டி.சத்தீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் ஆகியோர் நன்றி கூறினர்.

## தென்காசி மாவட்டத்தில்

# சுற்றுலா தொடர்பான பணிகள்: அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு செய்தார்!

### மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் – வே.ஜெயபாலன் – ராணி ஸ்ரீகுமார் எம்.பி. முன்னிலை!

தென்காசி, நவ.15 –

தென்காசி மாவட்டத்தில் சுற்றுலா தொடர்பான பணிகளை மேம்படுத்துவதற்காகவும்,வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காகவும் கடனாநதி அணை, பொட்டல்புதூர் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல்,குற்றாலம் நீர்வீழ்ச்சி மற்றும் கீழப்பாவூர் பெரிய குளம் போன்ற பகுதிகளில் நேற்று முன்தினம் (13.11.2024) மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில், தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் கள ஆய்வு செய்து தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். அந்த வகையில் தென்காசி மாவட்டம் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு மாவட்டமாகும். இங்கு தென்காசி காசிவிஸ்வநாதர் கோவில்,இலஞ்சி குமாரர் கோவில், பண்பொழி திருமலைக் கோவில், அச்சன்கோவில் போன்ற பிரசித்திபெற்ற கோவில்களும், குற்றால அருவி, பழைய குற்றாலம், புலியருவி, ஐந்தருவி போன்ற அருவிகளும் நிறைந்து காணப்படும் மாவட்டமாகும்.

**பேட்டரி வாகனம்!**

அதன்படி இன்றைய தினம், தென்காசி மாவட்டம் தென்காசி வட்டம் தர்மாபுரம் மடம் கிராமத்தில் அமைந்துள்ள கடனாநதி அணை ஆழ்வார் குறிச்சி பேரூராட்சி பகுதிக்கு பிரதான குடிநீர் அமைப்பாக இருந்து வருகிறது.

கடனாநதி அணை பூங்காவினை பார்வையிடவரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் புதிதாக பூங்காவின் நுழைவுச்சீட்டு வளாகம் அமைத்தல், வாகனம் நிறுத்தும் இடம் சுற்றுலா பயணிகள் உள்ளே செல்லவும், வெளியேற்றும் பாதையை அகலப்படுத்துதல், உணவுக் கூடங்களை மேம்படுத்துதல்,குடிநீர் மற்றும் சுகாதாரபணிகளை மேம்படுத்துதல், விளையாட்டு உபகரணங் கள், இசை நீரூற்றுகள், மாற்றுத் திறனாளிகளுக்கான பேட்டரி வாகனம் மற்றும் குப்பைகளை மறுசுழற்சி ஏற்பாடுகள் போன்றவைகளை மேம்படுத்துவது குறித்தும்,

**சாரல் திருவிழா!**

பொட்டல்புதூர் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசலில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி விழாவிற்கு வெளிமாநிலங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் வருகை புரிவதால் அனைவரும் தங்குவதற்கு ஏதுவாக, தங்கும் விடுதி,கழிப்பிடம் மற்றும் பார்க்கிங் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைப்பது குறித்தும், குற்றாலத்தில் சீசன் காலங்களில் அனைத்து ஊர்களிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் மக்கள் வருகை புரிந்து குற்றாலச்சாரலினை அனுபவித்து செல்கின்றனர்.இங்கு சுற்றுலாத்துறை சார்பாக சாரல் திருவிழா 10 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும் சாரல் திருவிழாவில் ஒவ்வொரு நாட்களிலும் கலை நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடைபெறும். பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு கண்டு மகிழ்ந்து செல்வர்.

**புதிதாக படகு குழாம்!**

எனவே குற்றாலத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்தும்,மேலும் கீழப்பாவூர் பேரூராட்சிக்குட்பட்ட பெரியகுளத்தில் புதிதாக படகு குழாம் அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டப் பொருளாளர் ஷெரிப், மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி,கென்னடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, ஆறுமுகச்சாமி,சேக் தாவுது, சீனிவாசன் ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், செல்லத்துரை, ரவிசங்கர், சுரேஷ்,ஜெயக்குமார், நகரச் செயலாளர்கள் சாதிர், அப்பாஸ்,வெங்கடேசன், தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, செயற்பொறியாளர் (சிற்றாறு வடிநிலக் கோட்டம்) தனலெட்சுமி, உதவி செயற் பொறியாளர் சுப்பிரமணிய பாண்டியன், உதவிப் பொறியாளர் உமாபதி, கடையம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், ராதாகிருஷ்ணன், சுற்றுலா அலுவலர் சீனிவாசன்,குற்றாலம் செயல் அலுலர் சுஷ்மா, தென்காசி வட்டாட்சியர் ராம்குமார், கீழப்பாவூர் பேரூராட்சி மன்றத் தலைவர் ராஜன், பேரூர்ச் செயலாளர்கள் குட்டி, சுடலை, முத்தையா, ராஜராஜன், அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, ரமேஷ், கருப்பணன், சுப்பையா, கடையநல்லூர் நகர்மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான், வீராணம் சேக் முகமது, ராமராஜன், கரிசல் வேலுச்சாமி,பொன்செல்வன், செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.





தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி குற்றாலம் மெயின் அருவியை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.உடன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பாக முகவர்கள் ( பி.எல்.ஏ. 2) ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனைக் கூட்டம் இன்று (15-11.2024 - வெள்ளிக்கிழமை) கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

காலை 10 மணிபுதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி மாவட்ட தி.மு.க. அலுவலகம் புதுக்கோட்டை,

மதியம் 2 மணி கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி, ஏ.டி.திருமண மண்டபம், கந்தர்வக் கோட்டை.

மதியம் 3 மணி விராலிமலை சட்டமன்ற தொகுதி, மாலா மங்கள மஹால் விராலிமலை.

மாலை 4 மணி கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி ஓ.எஸ்.பி திருமண மண்டபம் கீரனூர்.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- 16, 17, 23, 24.11.2024 ஆகிய தேதியில் நடைபெறும் வாக்காளர் முகாம் சம்பந்தமாக,

**கே.கே.செல்லப்பாண்டியன்**
செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.